போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்

IV-வது பாகத்தின் ஸப்ளிமெண்ட்

SUPPLEMENT TO PART IV OF THE FORT ST. GEORGE GAZETTE,

JUNE 6, 1922.

ந. 9(1).] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலை, 1922-ம௵ ஜூன்௴ 6௳. [விலை, 3 பை.

சென்னைச் சட்டநிரூபண சபையாரின் ஆக்ட்

ACT OF THE LOCAL LEGISLATURE OF MADRAS.

சென்னைச் சட்டநிரூபண சபையாரால் செய்யப்பட்ட ஆக்ட்.

இந்தியா கவர்ன்மெண்டுக்குச் சம்பந்தப்பட்ட ஆக்ட் 81-வது பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்டிருக்கும் நிபந்தனைகளை அனுசரித்து, சென்னைச் சட்ட நிரூபண சபையாரால் செய்யப்பட்ட அடியிற்கண்ட ஆக்டானது - 1922-ம௵ மார்ச்௴ 30௳ கவர்னரவர்களாலும், 1922-ம௵ மே௴ 10௳ கவர்னர் ஜெனரலவர்களாலும் அங்கீகரிக்கப்பட்டு, இதனால் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தஞ்செய்யப்படுகிறது :—

ACT No. VIII OF 1922.

1922-ம௵த்து 8-வது ஆக்ட்.

AN ACT TO AMEND THE MADRAS PROPRIETARY ESTATES' VILLAGE-SERVICE ACT, 1894, AND THE HEREDITARY VILLAGE-OFFICES ACT, 1895.

சென்னபட்டணத்து 1894-ம௵த்திய ஒருவருக்கேயுரிய பூஸ்திதிகளின் கிராமவூழிய ஆக்டையும் பரம்பரையான கிராம உத்தியோகங்களைப் பற்றிய 1895-ம௵த்து ஆக்ட்டையும் திருத்துவதற்கான ஆக்ட்.

ன்னபட்டணம் 1894-ம௵த்து 2-வது ஆக்டும் 1895-ம௵த்து 3-வது ஆக்டும்.

பீடிகை.

சென்னபட்டணத்து 1894-ம௵த்திய ஒருவருக்கேயுரிய பூஸ்திதிகளின் கிராமவூழிய ஆக்டையும் பரம்பரையான கிராம உத்தியோகங்களைப்பற்றிய 1895-ம௵த்து ஆக்டையும் பின்னும் திருத்துவது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

சுருக்கமான பெயர்.

1. இந்த ஆக்டை, சென்னபட்டணத்து ஒருவருக்கேயுரிய பூஸ்திதிகளின் கிராம வூழியத்தையும் பரம்பரையான கிராம உத்தியோகங்களையுங் குறித்த ஆக்டுகளைச் சிறிதுகாலத்துக்குத் திருத்துவதற்கான 1922-ம௵த்து ஆக்ட் என்று சொல்லலாம்.

செலாவணியாய்க்கொண்டிருக்கும் காலமும் பிரயோகமும்.

2. இந்த ஆக்ட் - 1923-ம் ௵ டிஸெம்பர் ௴ 31௳ வரையில் செலாவணியாய்க்கொண்டிருக்கும்.

இந்த ஆக்டானது - சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸியின் எந்த பாகத்துக்குப் பிரயோகப்படவேண்டுமென்று ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜெட்டிலும் ஜில்லாவின் ஸர்க்கார் கெஜெட்டிலும் விளம்பரமூலமாய் அப்போதைக்கப்போது கட்டளையிடக்கூடுமோ அந்த பாகத்துக்குப் பிரயோகப்படத்தக்கதாகும்.

கிராம உத்தியோகஸ்தர்களை அப்புறப்படுத்துவது.

3. சென்னபட்டணத்து 1894-ம் ௵த்திய ஒருவருக்கேயுரிய பூஸ்திதிகளின் கிராம ஆூழிய ஆக்ட் 16-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட பகுதியிலும் பரம்பரையான கிராம உத்தியோகங்களைப்பற்றிய 1895-ம் ௵த்திய சென்னபட்டணத்து ஆக்ட் 7-வது பிரிவிலும் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, டிஸ்ட்ரிக்ட் கலெக்டரானவர் - பரம்பரையான கிராம உத்தியோகங்களைப்பற்றிய 1895-ம் ௵த்திய சென்னபட்டணத்து ஆக்ட் 3-வது பிரிவின் (1), (2), (3) குறிப்பிட்ட பகுதிகளில் கண்ட வகுப்புகளைச் சேர்ந்த உத்தியோகங்களில் எதையாவது வகிக்கும் உத்தியோகஸ்தர், கவர்ன்மெண்டின் அதிகாரத்துக்கு விரோதமான நோக்கம் கொண்டதென்று டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் அபிப்பிராயப்படுகிற யாதொரு ராஜீய இயக்கத்தின் காரணமாக தம்முடைய அலுவலைச் செய்ய மறுத்தாலும் அல்லது அதைச் செய்வதில் அசட்டையாயிருந்தாலும் அல்லது தமது உத்தியோகத்தை ராஜிநாமா செய்தாலும், அப்படிப்பட்ட உத்தியோகஸ்தரை நீக்கிவிடலாம் அல்லது அப்புறப்படுத்தலாம்.

அப்புறப்படுத்துவதற்கு முன் அனுசரிக்கவேண்டிய நடவடிக்கைமுறை.

4. டிஸ்ட்ரிக்ட் கலெக்டரானவர் - நீக்குவதாகவோ அல்லது அப்புறப்படுத்துவதாகவோ உத்தரவு பிறப்பிப்பதற்குமுன், அப்படி நீக்கவோ அல்லது அப்புறப்படுத்தவோ கூடாதென்பதற்குக் காரணம் காட்ட அந்த உத்தியோகத்தை வகிப்பவருக்கு அவகாசம் கொடுப்பதுமல்லாமல், அந்தப்படி நீக்குவதற்கோ அல்லது அப்புறப்படுத்துவதற்கோ தமக்குள்ள காரணங்களை எழுதிவைக்கவும் வேண்டும். சென்னபட்டணத்து 1894-ம் ௵த்திய ஒருவருக்கேயுரிய பூஸ்திதிகளின் கிராமஆூழிய ஆக்ட் 16-வது பிரிவிலும், பரம்பரையான கிராம உத்தியோகங்களைப்பற்றிய 1895-ம் ௵த்திய சென்னபட்டணத்து ஆக்ட் 23-வது பிரிவிலும் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, ரெவினியு போர்டாருக்கு எதற்குள் அப்பீல் செய்துகொள்ளவேண்டுமோ அந்தக் கால அளவானது ஒரு மாதமாகும்.

அப்புறப்படுத்துவதனால் இன்னது விளையுமென்பது.

5. அந்தப்படி நீக்கிவிடப்பட்டதன்மேலாவது அப்புறப்படுத்தப்பட்டதன்மேலாவது, அந்த உத்தியோகத்துக்குப் பரம்பரையாயுள்ள பாத்தியதையானது-டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் வேறே விதமாய்க் கட்டளையிட்டாலன்றி மற்றப்படி, நீக்கிவிடப்பட்ட அல்லது அப்புறப்படுத்தப்பட்ட உத்தியோகஸ்தர் எந்த குடும்பத்தைச் சேர்ந்தவரோ அந்த குடும்பத்திலுள்ள பிரிவினையாகாத நபர்கள் சம்பந்தப்பட்டவரையில் அற்றுப்போகும்; மேலும், சென்னபட்டணத்து 1894-ம் ௵த்திய ஒருவருக்கேயுரிய பூஸ்திதிகளின் கிராமஆூழிய ஆக்ட் 10-வது பிரிவைச் சேர்ந்த (2), (3) குறிப்பிட்ட உட்பிரிவுகளும், 11-வது பிரிவும், பரம்பரையான கிராம உத்தியோகங்களைப்பற்றிய 1895-ம் ௵த்திய சென்னபட்டணத்து ஆக்ட் 10-வது பிரிவைச் சேர்ந்த (2), (3), (4), (5), (6) குறிப்பிட்ட உட்பிரிவுகளும் 11-வது பிரிவும் அந்த உத்தியோகத்துக்குப் பிரயோகப்படாமற் போவதுமல்லாமல், பரம்பரையான கிராம உத்தியோகங்களைப்பற்றிய 1895-ம் ௵த்திய சென்னபட்டணத்து ஆக்ட் 13-வது பிரிவின்படியாகிலும் மற்றப்படியாகிலும் வியாஜ்ஜியம் தொடருவதற்கான யாதொரு பாத்தியதை அப்படிப்பட்ட எந்த நபருக்கும் ஏற்படவுமாட்டாது.

காலி ஸ்தானங்களைப் பூர்த்தி செய்வது.

6. சென்னபட்டணத்து 1894-ம் ௵த்திய ஒருவருக்கேயுரிய பூஸ்திதிகளின் கிராம ஆூழிய ஆக்ட் 9, 12, 14-வது பிரிவுகளில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, டிஸ்ட்ரிக்ட் கலெக்டரானவர் - அந்த உத்தியோகம் காலியாயிருக்கவேண்டுமென்றாவது அந்த காலியைப் பூர்த்திசெய்யவேண்டுமென்றாவது கட்டளையிடலாம்.

ஆர். ராமசந்திர ராவ்,
கவர்ன்மெண்ட் ஸெக்ரெடரி,
லா (லெஜிஸ்லெடிவ்) டிபார்ட்மெண்ட்.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
Tamil Translator to Government.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.